**மேல்நிலை இரண்டாமாண்டு மாதிரி செய்முறைத் தேர்வு – பிப்ரவரி–2019**
**கணக்குப்பதிவியலும் – தணிக்கையிலும்**
**(தொழிற்கல்வி பிரிவு)**
**செய்முறை – I**

**Set – I** **காலம் : 2–30 மணி** **மதிப்பெண் : 75**

**I . எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**ஒவ்வொரு வினாவிற்கும் 15 மதிப்பெண்கள்.**

1. திரு.ரத்தினம் என்பவரின் ஏடுகளிலிருந்து 2015 –சூன் 30–ம் நாளுக்குரிய இருப்பாய்வு பின்வருமாறு :–

| விவரம் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| முதல் எடுப்பு | | 15,000 |
| இயந்திரம் | 4,800 | |
| அறைகலன் | 1,500 | |
| பற்பல கடனாளிகள் | 20,000 | |
| பற்பல கடனீந்தோர் | | 13,000 |
| வட்டி | 1,250 | |
| கூலி | 10,000 | |
| சம்பளம் | 7,500 | |
| உள்தூக்குக் கூலி | 500 | |
| கொள்முதல் திருப்பம் | | 1,000 |
| விற்பனை திருப்பம் | 1,500 | |
| பெற்ற கடன் | | 20,000 |
| ஆரம்ப சரக்கு | 7,500 | |
| கொள்முதல் | 60,000 | |
| விற்பனை | | 90,000 |
| அலுவலக வாடகை | 1,100 | |
| காப்பீடு | 240 | |
| வட்டம் அளித்தது | 1,000 | |
| வட்டம் பெற்றது | | 500 |
| பொதுச் செலவு | 1,200 | |
| கை ரொக்கம் | 150 | |
| வங்கி ரொக்கம் | 1,260 | |
| | 1,39,500 | 1,39,500 |

சரிகட்டுதல்கள் :–

1. ஆண்டிறுதி சரக்இருப்பு ரூ.10,000
2. கொடுபட வேண்டிய வாடகை ரூ.100
3. முன்கூட்டி செலுத்திய காப்பீடு ரூ.40

அந்த ஆண்டுக்கான வியாபார,லாபநட்ட கணக்குள் மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு ஆகிய வற்ளைத் தயாரிக்க

2. A. ரூ.1,60,000, B. ரூ.1,00,000 முதலிட்டு இணை வினை ஒன்றை மேற்கொண்டனர். அவர்கள் இலாபத்தை முறையே 1/3 , 2/3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்வதாக ஒப்புக் கொண்டு இணை வங்கி கணக்கைத் தொடங்கினர். அவர்கள் ரொக்கம் கொடுத்து வாங்கிய சரக்கு ரூ.1,60,000. B.அளித்த சரக்கு ரூ.80,000. அனைத்து சரக்கு களையும் ரூ.3,40,000க்கு விற்றனர். அவர்கள் செய்த செலவு ரூ.8,200 விற்பனை மீது Bக்கு உரிய கழிவு 3% ஆகும்.

   இணை வினை முடிவு பெற்றது எனக் கொண்டு முக்கிய குறிப்பேடுகளை பதிவு செய்க.

3. திருச்சியில் உள்ள முருகன் என்பவர் சென்னையிலுள்ள பாலாஜிக்கு 500 பெட்டகங்கள் பட்டாசு அனுப்பீடு செய்கிறார். அவருக்கு பெட்டகம் ஒன்றின் அடக்கம் ரூ.400 ஆகும். கூலி என்ற வகையில் அவருடைய செலவுகள் ரூ.30,000 பாலாஜி மீது ரூ.1,00,000 க்கு முன்பணமாக மாற்றுச்சீட்டு எழுதி அதை ஏற்கப் பெற்று, பின்னர் அதை ரூ.98,000க்கு வட்டம் செய்தார். விற்பனை கணக்கறிக்கை காட்டிய விவரங்கள்.

   ரூ.700 வீதம் விற்ற பெட்டகங்கள் 300

   ரூ.720 வீதம் விற்ற பெட்டகங்கள் 200

   சத்தமும் வண்டிக்கட்டணமும் ரூ.26,000 அவருடைய கழிவு 6%

   பாக்கித் தொகைக்கு அனுப்பீடு பெறுநர் வங்கிப் பணவிடை அனுப்பினார்.

   முருகன் என்பவரது ஏடுகளில் குறிப்பேடுகள் தருக.

4. X என்பவர் ரூ.60,000 மும், Y என்பவர் ரூ.30,000 மும் இட்டு இணைவினையை மேற்கொண்டனர். அவர்கள் லாபத்தை முறையே 3:2 என்ற விகிதத்தில் பங்கிட்டுக் கொள்வதாக ஒப்புக் கொண்டு இணைவங்கிக் கணக்கு ஒன்றைத் தொடங்கினர். அவர்கள் ரொக்கம் கொடுத்து கொள்முதல் செய்த சரக்கு ரூ.1,00,000. Y என்பவர் அளித்த சரக்கு ரூ.10,000 எல்லா சரக்குகளையும் அவர்கள் ரூ.1,50,000க்கு விற்றனர். அந்த வினைக்காக அவர்கள் செய்த செலவு ரூ.5,000. விற்பனை மீது Yக்கு உரிய கழிவு 2 ரூ.

   அவர்களிடையே கணக்கு முடிக்கப்பட்டது எனக் கொண்டு இணைவினைக் கென தனி ஏடுகளில் தோன்றும் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

5. குழலி, காஞ்சி என்ற கூட்டாளிகள் 7:5 என்ற விகிதத்தில் இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். 31–12–2012 ம் நாளைய அவர்களது இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ | சொத்துகள் | ரூ |
|---|---|---|---|
| குழலி 30,000<br>காஞ்சி 25,000 | 55,000 | நிலம் கட்டடம் | 40,000 |
| காப்பு நிதி | 10,000 | பொறி இயந்திரம் | 10,000 |
| பற்பல கடனீந்தோர் | 16,000 | முதலீடுகள் | 20,000 |
| செ.மா.சீட்டுகள் | 6,800 | சரக்கு இருப்பு | 11,000 |
| | | பற்பல கடனாளிகள்<br>5000<br>200 | 4,800 |
| | | (–)ஒதுக்கு ரொக்கம் | 2,000 |
| | 87,000 | | 87,000 |

01–01–2013 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்கு அவர்கள் கோதையை சேர்த்துக் கொள்ள ஒப்புக்கொண்டனர்.

1. 1/3 பங்குக்கு கோதையை சேர்த்துக் கொள்வது அவர் ரூ.20,000 முதல் கொண்டு வருவது
2. நற்பெயர் மதிப்பு ரூ.36,000 என ஏடுகளில் தோற்றுவிப்பது.
3. சரக் இருப்பு மதிப்பில் ரூ.2000 குறைப்பது
4. ஐயக்கடன் ஒதுக்கு ரூ.300 ஆக இருக்குமாறு மாற்றுவது.
5. நிலம் கட்டிடம் ரூ.45,000 முதலீடுகள் ரூ.25,000 என்று மறு மதிப்பீடு செய்யப்பட்டது.
6. பற்பல கடனீந்தோரில் அடங்கியுள்ள பொறுப்பு ரூ.500 ஐப் போக்கு எழுதுவது.

மறு மதிப்பீடு கணக்கு, கூட்டாண்மையின் இருப்பு நிலைக் குறிப்பு ஆகியவற்றை தயாரிக்க.

6. லட்சுமி வரையறு நிறுமம் 50,000 நூறு ரூபாய் பங்குகளை ரூ.20 முனைமத்துடன் வெளியிட்டது. செலுத்த வேண்டியது.

| | |
|---|---|
| விண்ணப்பத்துடன் | ரூ.20 |
| ஒதுக்கீட்டுடன் | ரூ.40 (முனைமம் ரூ20 சேர்த்து) |
| முதலாவது அழைப்புடன் | ரூ.30 |
| இரண்டாவது அழைப்புடன் | ரூ.30 |

அனைத்து பங்குகளும் ஒப்பட்டது. ஒதுக்கீடு செய்யப்பட்டு, உரிய தொகை முழுவது பெறப்பட்டது. எனக் கொண்டு குறிப்பேட்டுப்பதிவுகள் தருக.

பாஸ்கர் என்பவர் தனது கணக்கேடுகளை ஒற்றைப் பதிவு முறையில் வைத்துள்ளார். அவரது 1994–ம் ஆண்டுக்கான நிலவரம் பின்வருமாறு :–

| கணக்கின் பெயர் | 31–12–1993<br>ரூ | 31–12–1994<br>ரூ |
|---|---|---|
| வங்கியில் ரொக்கம் | 5,000 | 6,000 |
| கையிருப்பு ரொக்கம் | 5,700 | 4,800 |
| வங்கி மேல் வரைப்பற்று | 22,500 | 20,000 |
| சரக்கிருப்பு | 7,000 | 8,400 |
| அலுவலகப் பொறிகள் | 20,000 | 20,000 |
| பற்பல கடனீக்தோர் | 19,300 | 18,600 |
| பற்பல கடனாளிகள் | 15,100 | 14,900 |
| பெ.மா.சீட்டுகள் | 21,200 | 20,400 |
| நிலம் , கட்டிடம் | 26,500 | 26,500 |
| அறைகலன்கள் | 2,300 | 2,300 |
| செ.மா.சீட்டுகள் | 31,000 | 29,000 |

ஆண்டிடையில் அவர் ரூ.2,000 கூடுதல் முதல் இட்டார். தனது சொந்த செலவுக்கு ரூ.1000 எடுத்துக் கொண்டார். அலுவலகப் பொறி மீது 2 %ம், அறைகலன் மது 10% தேய்மானம் நீக்குக. கடனாளிகள் மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

1994 –ம் ஆண்டில் ஏற்பட்ட இலாபம் (அ) நட்டம் கண்டறிக.

**மேல்நிலை இரண்டாமாண்டு மாதிரி செய்முறைத் தேர்வு – பிப்ரவரி–2019**
**கணக்குப்பதிவியலும் – தணிக்கையிலும்**
**(தொழிற்கல்வி பிரிவு)**
**செய்முறை – I**

**Set – II** **காலம் : 2–30 மணி** **மதிப்பெண் : 75**

**I . எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**ஒவ்வொரு வினாவிற்கும் 15 மதிப்பெண்கள்.**

1. திரு.ஜெயபால் என்பவரது 31–03–2015 ஆம் நாளைய இருப்பாய்வு பின்வருமாறு :–

| விவரம் | பற்று ரூ | விவரம் | வரவு ரூ |
|---|---|---|---|
| பொறிவகைகள் | 4,000 | முதல் | 9,000 |
| வங்கி ரொக்கம் | 1,000 | விற்பனை | 12,000 |
| கை ரொக்கம் | 500 | வங்கிக்கடன் | 4,000 |
| கூலி | 1,000 | கடனீந்தோர் | 4,500 |
| கொள்முதல் | 8,000 | பங்காதாயம் பெற்றது | 300 |
| தொடக்க சரக்கு | 6,000 | | |
| கடனாளிகள் | 4,400 | | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 2,900 | | |
| வாடகை | 400 | | |
| வட்டி | 50 | | |
| கழிவு | 250 | | |
| பொதுச் செலவுகள் | 800 | | |
| சம்பளம் | 500 | | |
| | 29,800 | | 29,800 |

சரிகட்டுதல்கள்:–

1. 31–03–2015 அன்றைய சரக்கிருப்பின் மதிப்பு ரூ.8,000
2. கொடுபட வேண்டிய கூலி ரூ.100.
3. கொடுபட வேண்டிய சம்பளம் ரூ.100

ஆண்டிறுதி கணக்குகளை தயார் செய்க.

2. கல்கத்தாவில் உள்ள சுந்தர், சென்னையில் உள்ள கபில் என்பவருக்கு பெட்டி ஒன்று ரூ.2,000 வீதம் 50 தொலைக்காட்சிப் பெட்டிகளை அனுப்பீடு செய்தார். அவர் சத்தம் ஏனைய செலவுகள் என ரூ.2,500 செய்தார். மேலும் அவர் ரூ.25,000 க்கு முன் பணமாக மாற்றுச்சீட்டு எழுதி அதைப் பின்னர் ரூ.24,500 க்கு வட்டம் செய்தார். கபில் அனுப்பிய விற்பனைக் கணக்கறிக்கை காட்டிய விவரம் வருமாறு.

பெட்டி ஒன்று ரூ.2,600 வீதம் கடனாக விற்பனை செய்தவை – 30 பெட்டிகள்

பெட்டி ஒன்று ரூ.2,550 வீதம் ரொக்கத்திற்கு விற்பனை செய்தவை – 20 பெட்டிகள்

பண்டகக் காப்பு மற்றும் இதரபெய்ாவு காப்பீடு ரூ.1000. அவருக்கு உரிய கழிவு 10%

பாக்கித் தொகைக்கு வங்கிப்பணவிடை அனுப்பினார். அனுப்பீடு செய்பவரின் ஏட்டில் தோன்றும் குறிப்பேட்டுப் பதிவுகள் காட்டிடுக.

3. பொன்னி , பரணி என்ற இருவர் ஷ லிமிடெட் நிறுமத்திற்கு ரூ.1,60,000 க்கு கட்டிடம் ஒன்று கட்டித்தரும் இணைவினை மேற்கொண்டு முறையே $\frac{3}{5}$ , $\frac{2}{5}$ என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து கொள்ள ஒப்பு கொண்டனர். பாதி ஷ லிமிடெட் நிறுவன பங்குகளாகவும் பெறவுரியது. பொன்னி ரூ.45,000 , பரணி ரூ.40000 இட்டு இணை வங்கி கணக்கு தொடங்கினார். இணை வினை நடவடிக்கைகள் பின்வருமாறு:–

| | |
|---|---|
| மூலப்பொருள் வாங்கியது | ரூ.74,000 |
| கூலி வழங்கியது | ரூ.46,000 |
| இதர செலவுகள் செலுத்தியது | ரூ .6,000 |

ஒப்பந்தம் முடிக்கப்பட்டு ஒப்பந்த விலை பெறப்பட்டது.

ஒப்பந்த விலையின் ஒரு பகுதியாகிய பங்குகள் ரூ.70,000க்கு விற்கப்பட்டன.

பயன்படுத்தா மூலப் பொருள்களை ரூ.2,000 என்ற மதிப்பீட்டில் பரணி எடுத்துக்கொண்டார்.

இணை வினையின் ஏடுகளில் தோன்றும் குறிப்போட்டுப் பதிவுகள் தருக.

4. சென்னை கிரிக்கெட் சங்கத்தின் 2014 – ஜீன் 30 ம் நாளோடு முடிவுறும் ஆண்டிற்கான பெறுதல் – செலுத்தல் கணக்கு பின்வருமாறு :–

| பெறுதல்கள் | ரூ | செலுத்தல்கள் | ரூ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 20,400 | சம்பளமும் கூலியும் | 13,000 |
| சந்தா 2013 850 | | கேளிக்கை செலவுகள் | 6,450 |
| 2014 40,000 | | மின்கட்டணம் | 2,340 |
| 2015 1,000 | 41,850 | பொதுச்செலவுகள் | 3,500 |
| நன்கொடை | 12,000 | வாடகையும்,வரியும் | 1,200 |
| கேளிக்கை வரவுகள் | 8,800 | நிலைவைப்பு | 40,000 |
| வங்கி வட்டி | 800 | அச்சு எழுது பொருள் | 2,410 |
| | | அரசுப் பத்திரங்கள் | 10,000 |
| | | இருப்பு கீ/இ | 4,950 |
| | 83,850 | | 83,850 |

கூடுதல் விவரங்கள்:–

1. தொடக்க முதல் நிதி ரூ.71,250.
2. நிலைச் சொத்துக்கள் மதிப்பு ரூ.50,000.
3. சங்கத்தின் மொத்த உறுப்பினர்கள் 450 ஒவ்வொருவரும் ஆண்டு சந்தா ரூ.100 செலுத்துகின்றனர்.
4. நன்கொடையில் பாதியை முதல் படுத்துக.
5. கொடு பட வேண்டியக் கூலி ரூ.200 வகை செய்க.
6. நிலைச் சொத்துக்கள் மீதான தேய்மானம் ரூ.2000 அனுமதிக்க.

30–06–2014 அன்றைய அச்சங்கத்தின் வருவாய் செலவின கணக்கு , இருப்பு நிலைக்குறிப்பு தயாரிக்க.

5. பாஸ்கர் என்பவர் ஒற்றைப்பதிவு முறையில் கணக்கேடுகளை வைத்திருக்கின்றார். அவரின் 2015–ம் ஆண்டு தொழில் நிலவரங்களைக் கீழே தந்துள்ளார்.

| விவரம் | 31–12–2014<br>ரூ | 31–12–2015<br>ரூ |
|---|---|---|
| வங்கியில் ரொக்கம் | 5,000 | 6,000 |
| கையிருப்பு ரொக்கம் | 5,700 | 4,800 |
| வங்கி மேல் வரைப்பற்று | 22,500 | 20,000 |
| சரக்கிருப்பு | 7,000 | 8,400 |
| அலுவலகப் பொறிகள் | 20,000 | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 19,300 | 18,600 |
| பற்பல கடனாளிகள் | 15,100 | 14,900 |
| பெ.மா.சீட்டுகள் | 21,200 | 20,400 |
| நிலம் , கட்டிடமும் | 26,500 | 26,500 |
| அறைகலன்கள் பொறுத்தல்கள் | 2,300 | 2,300 |
| செ.மா.சீட்டுகள் | 31,000 | 29,000 |

ஆண்டிடையே பாஸ்கர் ரூ.2000 கூடுதல் முதல் இட்டார். ரூ.1000 தன்னுடைய சொந்த செலவுக்கு எடுத்துக் கொண்டார். அலுவலகப் பொறி 2% ம், அறைகலன் மீது 10 % தேய்மானம் நீக்குக. கடனாளிகள் மீது 5 % ஐயக்கடன் ஒதுக்கு உறுவாக்குக.

2015 ம் ஆண்டுக்குரிய லாபம் (அ) நட்டம் கணக்கிடுக.

6. டு மற்றும் மு என்ற கூட்டாளிகள் முறையே 7:5 என்ற விகிதத்தில் லாபம் (அ) நட்டம் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 31–12–2010–ம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ | சொத்துகள் | ரூ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 35,000 | வங்கி | 14,000 |
| செ.மா.சீட்டுகள் | 21,000 | பற்பல கடனாளிகள் | 40,000 |
| வங்கி மேல்வரை பற்று | 50,000 | சரக்இருப்பு | 34,000 |
| பொதுகாப்புகள் | 24,000 | பொறிவகை | 80,000 |
| முதல் கணக்குள்<br>டு 50,000<br>மு 40,000 | 90,000 | அறைகலன்கள் | 14,000 |
| | | பெ.மா.சீட்டுகள் | 12,000 |
| | | நற்பெயர் | 26,000 |
| | 2,20,000 | | 2,20,000 |

பின்வரும் பகிர்வுகளுக்குட்பட்டு அவர்கள் ‘G’ என்பவரை கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

1. G என்பவருக்கு 1/3 பங்கு தருவது அவர் ரூ.50,000 முதல் கொண்டு வருவது.
2. நற்பெயர் ரூ.50000 க்கு உயர்த்துவது
3. ஏடுகளில் பதிவு பெறாமல் உள்ள ரூ.5,000 மதிப்புடைய முதலீடுகளை கணக்கில் கொண்டு வருவது.

4. கடனீந்தோரில் அடங்கியுள்ள பொறுப்பு ரூ.3000த்தை போக்கெழுதுவது.

5. அறைகலன் மதிப்பில் ரூ.1,000ம் குறைப்பது ஐயக்கடன் ஒதுக்கு ரூ.1000 போக்கெழுதுவது மறுமதிப்பீடு கணக்கு, கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மற்றும் புதிய இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

7.வில்லியம் வரையறு நிறுமம் 10,000 பங்குகள் ஒன்று ரூ.10 வீதம் முகமதிப்பில் வெளியிட்டது. தொகை பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் மீது | ரூ.3,00 |
| ஒதுக்கீட்டின் மீது | ரூ.3.00 |
| முதலாவது அழைப்பு மீது | ரூ.200 |
| இறுதி அழைப்பு மீது | ரூ.2.00 |

அனைத்து பங்குகளுக்கும் உண்டான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஒதுக்கீடும் செய்யப்பட்டுவிட்டது அவற்றுக்குரிய தொகை முழுவதும் பெறப்பட்டது எனக் கொண்டு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

**மேல்நிலை இரண்டாமாண்டு மாதிரி செய்முறைத் தேர்வு – பிப்ரவரி–2019**
**கணக்குப்பதிவியலும் – தணிக்கையிலும்**
**(தொழிற்கல்வி பிரிவு)**
**செய்முறை – II**

**Set – I** **காலம் : 2–30 மணி** **மதிப்பெண் : 75**

**I . எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**ஒவ்வொரு வினாவிற்கும் 15 மதிப்பெண்கள்.**

1. தணிக்கையில் வரையறு. தணிக்கையின் நோக்கங்கள் யாவை ? பிழைகளின் வகைகளை விவரி.

2. தொடர் தணிக்கை என்றால் என்ன ? அதன் நன்மைகள் யாவை ?

3. கூலி செலுத்துதல்களுக்கான அகச்சீராய்வு முறைகளில் ஏதேனும் எட்டினை குறிப்பிடுக.

4. சான்றுச்சீட்டுகளைக் கொண்டு சான்றாய்வு செய்யும் முறைகளில் ஏதேனும் ஏழு முறைகளை விவரி.

5. தணிக்கையரின் உரிமைகளும் அதிகாரங்களும் யாவை ?

6. நிறுமம் ஒன்றின் பங்கு மாற்றத் தணிக்கையை எவ்வாறு மேற்கொள்வாய் என விவரி (ஏதேனும் 8 கருத்துருக்கள்)

7. நீ ஒரு தணிக்கையராக ஒரு மருத்துவமனையை எவ்வாறு தணிக்கை செய்வாய் ? (ஏதேனும் 8 கருத்துக்கள்)

**மேல்நிலை இரண்டாமாண்டு மாதிரி செய்முறைத் தேர்வு – பிப்ரவரி–2019**
**கணக்குப்பதிவியலும் – தணிக்கையிலும்**
**(தொழிற்கல்வி பிரிவு)**
**செய்முறை – II**

**Set – II** **காலம் : 2–30 மணி** **மதிப்பெண் : 75**

**I . எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**ஒவ்வொரு வினாவிற்கும் 15 மதிப்பெண்கள்.**

1. தணிக்கையராகிய நீவிர் கணக்கேடுகளில் காணப்படும் மோசடிகளைக் கண்டுபிடித்து எவ்வாறு தவிர்ப்பாய் என விவரி ?

2. குறிப்பு வரைக :
அ. சட்ட முறைத் தணிக்கை
ஆ. இருப்பு நிலைக் குறிப்பு தணிக்கை
இ. இடைக்காலத் தணிக்கை

3. இருப்புச்சரக்கை சரிபார்த்தல் முறைகளை விவரி ?

4. தணிக்கையாளராகிய நீர் தணிக்கையருடைய உரிமைகள் அதிகராங்கள் பற்றி குறிப்பிடுக.

5. பின்வருவனவற்றை விவரி

அ. முனைமத்தில் பங்குகள் வெளியிடுதல்
ஆ.வட்டத்தில் (தள்ளுபடி) பங்குகள் வெளியிடுதல்

6. மருத்துவமனையை எவ்வாறு தணிக்கை செய்வாய் என்பதனை ஏதேனும் 8 கருத்துக்களை விவரி.

7. காப்புகளின் வகைகளை எழுதி விவரி ?